செ.வெ. எண் 829 நாள் 28-12-07

## பத்திரிகைச் செய்தி

மாநில பாடத்திட்டத்தில் (எஸ்.எஸ்.எல்.சி.) 500 மதிப்பெண்களுக்கும், ஓரியண்டல் பாடத்திட்டத்தில் 600 மதிப்பெண்கள்களுக்கும், மெட்ரிக்குலேசன் பாடத்திட்டத்தில் 1100 மதிப்பெண்களுக்கும், ஆங்கிலோ இந்திய பாடத்திட்டத்தில் 1000 மதிப்பெண்களுக்கும், என மொத்த மதிப்பெண்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில பாடத்திட்டத்தில் சுமார் 6.5 இலட்ச மாணவர்களும், மெட்ரிக் பாடத்திட்டத்தில் சுமார் 1.1 இலட்ச மாணவர்களும், ஆங்கிலோ இந்திய பாடத்திட்டத்தில் சுமார் 5000 மாணவர்களும் மற்றும் ஓரியண்டல் பள்ளிகளில் 1500 மாணவர்களும் பயின்று தேர்வெழுதுகின்றனர். மாநில பாடத்திட்டத்தில் பயிலுவோர் எண்ணிக்கையே அதிகமாகும். இவர்களில் பெரும்பாலான மாணவர்கள் கிராமப்புற பள்ளிகளில் பயிலுகின்றனர். 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் இளவயதினை கருத்தில் கொண்டும் 84.85 சதவீத மாணவர்கள் மாநில பாடத்திட்டத்தில் பயிலுவதன் காரணமாகவும் மைய அரசின் பாடத்திட்டத்தில் (CBSE) பள்ளியிறுதித் தேர்வில் மொத்த மதிப்பெண்கள் 500 ஆக இருப்பதையும் கருத்தில் கொண்டு அனைத்து வகை பாடத்திட்டங்களிலும் மொத்த மதிப்பெண்கள் 500 என நிர்ணயித்து ஒரே சீரான சான்றிதழ்கள் வழங்கலாம் என்றும், அதன்படி தற்போதுள்ள பாடத்திட்டம், பாடப்புத்தகங்கள், தேர்வுத் தாள்களின் எண்ணிக்கை, வினாத்தாள் அமைப்பு ஆகியவற்றில் எவ்வித மாறுதலும் செய்யாமல், ஒவ்வொரு பாடத்திட்டத்திலும் உள்ள மொத்த மதிப்பெண்கள் 500 என இருக்கும் வகையில் பாடவாரியாக மதிப்பெண்களை மாற்றம் செய்து ஒரே சீரான மதிப்பெண்கள் வழங்கலாம் என்றும், இதன்படி அனைத்து வகை பாடத்திட்டத்தில் பயிலுவோருக்கும் ஒரே சீரான 500 மொத்த மதிப்பெண்கள் கொண்ட சான்றிதழ்கள் வழங்கலாம் எனவும் அரசு முடிவெடுத்துள்ளது. மேற்படி மாற்றம் செய்வது

1/2

குறித்து கருத் நுக்களைப் பெற 12.10.07 ல் மாநில திட்ட, மெட்ரிக், ஓரியாண்டல், மற்றும் ஆங்கிலோ இ ,திய பள்ளிகள் சார்ந்த முதல்வர்கள், தலைமை ஆசிரி ியர்கள் மற்றும் சங்க பிரதிநிதிகள் கொண்டு கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்துக்கு வந்திருந்தோரில் ஏறக்குறைய , புனைவருமே மாற்றத்தினை வரவேற்றனர். இத்திட்டத்திற்கு மாநில திட்டக்குழு ஒப்ப தல் வழங்கியுள்ளது. இது குறித்து அரசாணை வெளியி ப்படுகிறது.

2/2

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை -9